## 28.30 மாநில திட்டக்குழுவின் அறிக்கை – சிறுதொழில்கள் பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

சிறுதொழில்கள் (எஸ்ஐடி) துறை

அரசாணை (நிலை) எண். 66 நாள் : 21.06.1999

படிக்க :

அரசு நே.மு.கடித எண் 14539/சி4/99 ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.05.1998

**ஆணை**

பார்வையில் கண்ட கடிதத்தில் முதல் நிலைக்குழுவின் பரிந்துரைகளில் உணவு பதப்படுத்துல், உள்ளடங்களான சிறுதொழில்கள் என்ற பொருளின்கீழ் மேலும் அதிகாரங்களை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க இக்குழு பரிந்துரை செய்துள்ளது. அவற்றை ஆய்வு செய்து அரசு, இவ்வாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொறுப்புகளை உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி ஆணையிடுகிறது.

2. இது குறித்து தேவையான மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் பணிக்கப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஓ.பி. சோசம்மா**
அரசு செயலாளர்

### பிற்சேர்க்கை

### 8. உணவு பதப்படுத்தும் தொழில் உள்ளடங்களான சிறுதொழில்கள்

#### கிராம ஊராட்சிகள்

மைய, மாநில அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் கிராமப்புறங்களில் உள்ள தொழில் தொடங்க ஆர்வமுள்ள பயனாளிகளுக்கு சென்றடைய கிராம ஊராட்சி தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் சென்றடைய கிராம ஊராட்சிகள் உதவி வேண்டும்.

#### ஊராட்சி ஒன்றியங்கள்

ஒன்றியம் அளவில் தொழில்கள் ஆரம்பிக்கவும், அதற்கான வசதி வாய்ப்புகளை கண்டறியும் பணியினை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்ள வேண்டும்.

#### மாவட்ட ஊராட்சிகள்

மாவட்ட அளவில் தொழில் துவங்குவதற்கான ஆதாரங்களைத் தயாரித்து அதனை செயல்படுத்த தொழில் வளர்ச்சி மாநாடுகள் நடத்தும் பணியினை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும் மாவட்ட அளவில் தொழில்கள் மற்றும் தொழிலாளர் பற்றிய நிலைக்குழுவை அமைக்கும்போது அதில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரை உறுப்பினராக சேர்க்க வேண்டும்.